271—

புறவழிச் சாலை

***47821—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலை 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு நில எடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணிகள் முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*

திரு. க. கோபால்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமை தாங்கிய, தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன். விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் மிகப் பெரிய தொழில் நகரமாகும். தினந்தோறும் நூற்றுக்கணக்கான கன்டெய்னர் லாரிகள் ஊருக்குள் வந்து செல்கின்றன. இதனால், மிகப் பெரிய அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. மேலும், தேசிய நெடுஞ்சாலை எண் 208 இல் திருவில்லிபுத்தூர், ராஜபாளையத்தைக் கடந்துதான் பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோயிலுக்கும், சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கும் பக்தர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. குற்றால சீசனில் தமிழகம் முழுவதிலுமுள்ள அதிகப்படியான சுற்றுலாப் பயணிகள் குற்றாலம்*

2014 ஜுலை 30]

செல்வதற்கு இந்தச் சாலையைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, நில ஆர்ஜிதப் பணிகளைக் கூடிய விரைவில் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்காக, தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை விரைவில் ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 208-ல் கொல்லம்-தென்காசி-திருமங்கலம் சாலையில், ராஜபாளையம் முதல் திருவில்லிபுத்தூர் வரை 25.7 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒருங்கிணைந்த புறவழிச் சாலை அமைக்க மைய அரசு ரூ.13.17 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியதன்பேரில், நில ஆர்ஜிதம் செய்வதற்கு 2 சிறப்பு நிலம் கையகப்படுத்தும் அலகுகள் மற்றும் ஒரு திட்ட அலகு ஆகியவை அமைக்கப்பட்டு, நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்புறவழிச் சாலைக்கு மொத்தம் 160.63 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். ராஜபாளையம் தாலுகாவில் 8 கிராமங்களிலும், திருவில்லிபுத்தூர் தாலுகாவில் 9 கிராமங்களிலும் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பணி முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைக்கின்ற பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.

திரு. க. கோபால்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, குடியாத்தம் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்யா ஆற்றின் கரைமீது புறவழிச் சாலை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். சென்ற கூட்டத் தொடரில் நான் கேட்ட துணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று கூறினார்கள். அந்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தத்திற்கு புறவழிச் சாலை அமைப்பது குறித்த ஆய்வு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புவதாகக் கூறியுள்ளார்கள். தேசிய நெடுஞ்சாலை எண் 234, காட்பாடி-குடியாத்தம்-பேரணாம்பட்டு சாலையில் குடியாத்தம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வு தேசிய நெடுஞ்சாலை அலகு மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

272—

சொந்தக் கட்டடம்

***45956—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், சமயபுரம் மற்றும் கே.புதுக்குளத்திலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?